අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

---

**ஊடக வெளியீடு** **07 ஜனவரி 2019**

**காணாமற் போனோரின் குடும்பத்துடன் புதிய பிரச்சாரத்தினூடாக இதயபூர்வமான கூட்டிணைவு**

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது முதலாவது வருட பூர்த்தியை நிறைவுசெய்யும் முகமாக 2019ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி ''வேதனை என்றும் காணாமற்போவதில்லை, உண்மையைக் கண்டுபிடிக்கும் எம் கடமையினை நாம் நிறைவேற்றுவோம்'' என்ற தலைப்பிலான பிரச்சாரத்தை தொடங்குகிறது. தாங்கள் அன்பு செலுத்தும் ஆட்கள் பற்றிய உண்மைகளையும் அவர்களது நிலையையும் அறிந்து கொள்ள காத்திருக்கும் நாடெங்கிலுமுள்ள எல்லா இனங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இலங்கையினரது துயரத்தை மேலதிகமாகப் புரிந்துணர்வதையும் பச்சாதாபத்தை ஏற்படுத்துவதையும் இப் பிரச்சாரம் இலக்காகக் கொண்டுள்ளது. குறித்த பிரச்சாரத்தில் காணாமல்போன ஆட்களின் குடும்பங்கள் படும் பரந்துபட்ட வேதனைகளுக்கு ஒப்பான பகிர்வுகள், காணொலி மற்றும் ஒலி நாடாக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

''அன்பு செய்யப்படும் ஒருவர் காணாமல் ஆக்கப்படுவது அவரது குடும்பத்திற்கு மோசமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தும். அது அவர்களுக்குப் பலவித வேதனையைத் தரும் துக்கமாகும். இது அவர்கள் தன்னிலை அறியா அந்தரத்தில் விடப்படுவதுடன் முறையாகத் துக்கம் அனுட்டிக்கக் கூட முடியாத நிலையில் தள்ளிவிடுகிறது. அது அவர்களது உடல்நலம், சீவனோபாயம், சீரான மனநிலை மற்றும் வாழ்வு பற்றிய எதிர்பார்ப்பு ஆகியவற்றைப் பாதிக்கும். ஒரு சமூகம் என்ற நிலையில் இத்துன்பத்தை பாராமுகமாக இருக்காமல் நம் சக்திக்குட்பட்ட எல்லா முறைகளாலும் இக்குடும்பத்தினர் உண்மையை அறியும் உரிமையைப் பெற்றிட செயலாற்ற வேண்டும்'' என்கிறார் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திரு சாலிய பீரிஸ்.

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் என்பது இலங்கையில் காணாமற் போன ஆட்களின் நிலை பற்றிய உண்மைகளை கண்டறிந்து நிலை நிறுத்துவதற்கான பணிப்பாணை பெற்றுள்ள ஒரு சுதந்திர நிறுவனமாகும். கா.ஆ.அ. என்பது ஒரு சாரார் மட்டும் காணாமல் ஆக்கப்படுவது பற்றிச் செயற்படும் ஒரு நீதித்துறை நிறுவனம் என்ற தப்பான எண்ணத்திற்கு மாறாக, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டமானது அதன் பொறுப்புக்களை ஒரு விரிவான நோக்கைக் கொண்டு

எல்லா சமூகங்களுக்கும் வித்தியாசமான கால கட்டங்களில் நிகழ்ந்த மோதல்கள் மற்றும் அரசியல் அமைதியின்மைக் காலங்களில் நடந்த விடயங்களையும் உள்ளடக்கி உள்ளது. இது தெற்கில் அரசியல் கொந்தளிப்புக்கள், வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்ட மோதல்கள், மற்றும் மோதல்களுக்குப் பிற்பட்ட காலங்களில் காணாமற் போன ஆட்கள், யுத்த முன்னெடுப்பில் காணாமற்போனவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரை உள்ளடக்கும்.

“எமது நோக்கமானது இன, மத, நாட்டின் பிராந்தியம் பற்றிக் கருதாமல் குடும்பத்தாருக்கு பதில்கள் வழங்குவதாகும். பலியானவர்களே எமது பிரதான கரிசனைக்குரியவர்கள். எனினும் சமூகத்தில் இதர மக்கள் இவ்விடயங்களை அறிந்து எமது முயற்சி, வெற்றிபெற உதவ கடமைப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் இக்குடும்பங்களுக்கு உண்மையை எடுத்தியம்ப சட்டபூர்வமாகக் கடமைப்பட்டுள்ளது. எனினும் ஒரு சமூகம் என்ற அடிப்படையில் எம்மால் இயன்றவை அனைத்தையும் செய்து இவர்கள் வேதனையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான தார்மீக கடமை எமக்கு உண்டு” என்கிறார் கா.ஆ.அ, ஆணையாளர்களில் ஒருவரான, இளைப்பாறிய மேஜர் ஜெனரல் மொஹாந்தி பீரிஸ்.

கா.ஆ.அலுவலகத்தின் செயற்பாடானது காணாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலைகள் பற்றிய புலனாய்வு செய்தல், பலியானவர்களின் குடும்பங்களுக்கான இழப்பீடுகள் விதந்துரைத்தல், அவர்கள் காணாமல் ஆகியிருப்பதற்கான அல்லது இறந்துவிட்டார்கள் என்ற அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை வழங்குதல், மற்றும் காணமற் போனவர்களது விபரங்களடங்கிய தரவுத்தளத்தினை நடாத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

“அரச அதிகாரிகளிடத்திலும் பொதுமக்களிடத்திலும் குறைந்தளவிலான புரிதல்கள் அனுதாபம் மற்றும் ஆதரவு காணப்படுகின்றமையை நாங்கள் உணர்கின்றோம். காணாமல் போனவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி போதுமான விழிப்புணர்வு இல்லை. நாம் பொதுமக்களிடத்தில் புரிதல், ஒற்றுமை மற்றும் ஆதரவு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும், இதன்போது குடும்பங்கள் தாங்கள் தனியாக இருப்பதாக உணர்வதில்லை” என்று கூறுகின்றார் கா.ஆ.அ, ஆணையாளர்களில் ஒருவரான புண்ணியமூர்த்தி ஜெயதீபா.

இலங்கையில் காணாமல் ஆக்கப்படும் நிகழ்வுகளை எதிர்க்க வேண்டிய அவசியத்தை அங்கீகரிக்கவும் அக்குடும்பங்கள் படும் ஆழமான வேதனையை உணரவும், பொதுமக்கள் மத்தியில் புரிந்துணர்வும் விழிப்புணர்வும் ஏற்படுத்தும் பொருட்டு துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை பற்றியும் மேலதிக தகவல் மற்றும் எம்மை முகநூலில் பின்தொடர Facebook: https://www.facebook.com/ompsrilanka/